[29th January 1963

(இ) ஆம் என்றால், அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. தற்போதைக்கு இந்த கோரிக்கையை நிறைவேற்றுவது சாத்தியமானதல்ல எனக் கருதப்பட்டது. கலெக்டர் அவ்வாறு அறிவிக்கப்பட்டார்.

(*a*) Yes.

(*b*) The representation was examined. It was found that it was not feasible for the Government to comply with the request for the present. The Collector was informed accordingly.

திரு. ஏ. ஆறுமுகம் : மற்ற எந்த எந்த மாநிலத்திலிருந்து இத்தகைய கோரிக்கைகள் வந்திருக்கின்றன? அவற்றின் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : மற்ற மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பது பற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : சர்க்கார் வசமுள்ள, குறிப்பாக கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள டிராக்டர்கள் ரிபேராகி, அவற்றுக்காகப் பல லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டது உண்மையா?

கனம் திரு. பூ. கக்கன் : கோயமுத்தூர் மாவட்டத்தைப் பற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. அதற்குக் கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போடலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : விவசாயிகள், டிராக்டர்களை மிக அவசியமாகக் கருதுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றுக்கும் ஒரு டிராக்டர் வீதம் கொடுக்காவிட்டாலும், தாலுகா ஒன்றுக்கு ஒரு டிராக்டர் வீதமாவது கொடுப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : டிராக்டர்கள், புல் டோஸர்கள் இவைகளெல்லாம் விவசாய இலாகா மூலமாக விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. ஆர்.டி.எல்.ப. இலாகாவின்கீழ் இயங்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு டிராக்டர் வாங்கி வாடகைக்கு விடலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. பின்னர் இதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்படும்.

Dam across Palar (Ramanathapuram district)

* 2 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a dam across the Palar near Singampunari in Thiruppathur taluk in Ramanathapuram district ; and

(*b*) the estimated cost thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) Rs. 1,34,000.

29th January 1963]

(அ) ஆம்.

(ஆ) ரூபாய் 1,34,000.

திரு. எஸ். மாதவன் : *யுத்த கால அவசர நிலையை உத்தேசித்து இது போன்ற திட்டங்களை நிறுத்திவைக்க அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா? அல்லது, தொடர்ந்து நிறைவேற்றப்படுமா?*

கனம் திரு. பூ. கக்கன் : *இப்பேர்ப்பட்ட உணவு உற்பத்தித் திட்டங்களை துரிதமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் ஏற்பாடு செய்யப்படுகிறது.*

அமைச்சர்கள் பயணம்

*** 3 கேள்வி.—திரு. முனு ஆதி :** *கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) கடந்த ஐந்தாண்டுகளில், பல்வேறு இடங்களில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும், நமது மாநில அமைச்சர்கள் கலந்துகொண்டது, அவரவர்களது செலவிலா, அல்லது அரசாங்கச் செலவிலா?

(இ) அரசாங்க செலவில் என்றால், அங்ஙனம் செலவான தொகை எவ்வளவு?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *(அ) அமைச்சர்கள் கட்சிக் காரியமாகவோ, தங்கள் சொந்தக் காரியமாகவோ பயணம் செய்தால் அரசாங்க நிதியிலிருந்து பயணப்படி எதுவும் வாங்குவதில்லை.*

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) When the Ministers toured purely for party or private purposes, no travelling allowance was drawn by them from State funds.

(*b*) Does not arise.

*** 4 கேள்வி.—திரு. முனு. ஆதி :** *கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) இளைஞர் காங்கிரஸ் சங்கங்கள் திறப்பு விழாக்களுக்கும், மண்டல காங்கிரஸ் கமிட்டி கூட்டங்களுக்கும் அமைச்சர்கள் சுற்றுப் பயணங்கள் செய்வது அவரவர்களது சொந்தச் செலவிலா? அல்லது அரசாங்கச் செலவிலா?

(இ) அரசாங்கச் செலவில் என்றால், ஏப்ரல் 1962 முதல் ஜூன் 1962 முடிய, இது நாள் வரை, இதற்காக அரசாங்கத்திற்கு ஆகியுள்ள செலவென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) When the Ministers tour purely for party or private purposes, no travelling allowance is drawn by them from State Funds.

(*b*) Does not arise.